விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 3 சம்மான் 27 இதழ் 127
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-6-1985

## ஓமந்தையில் பாலம் தகர்ப்பு: யாழ்தேவிப் பயணம் தடை

(கொழும்பு)

ஓமந்தையில் தொண்ணூறு அடி நீளமான ரயில் பாதையும். மதகு ஒன்றும் வடபகுதித் தீவிரவாதிகளினால் தகர்க்கப்பட்டதாக நேற்று அரசு அறிவித்த அறிக்கையொன்றில் தெரிவித்தது. இதனால் ரயில் பாதைக்குப் பெருமளவு சேதம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

பலநாட்கள் இடைவெளிக்குப்பின் கடந்த வெள்ளிக்கிழமை வடபகுதி ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

### பிரயாணிகள் ஏமாற்றம்

யாழ்தேவி நேற்று வவனியா வரையுமே சேவையில் ஈடுபட்டது.

இன்று முதல் யாழ்தேவி வவனியா வரையுமே சேவையில் ஈடுபடும் என ரயில்வே பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணிகள் எவரும் யாழ்தேவியில் செல்லவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

பல பிரயாணிகள் ரயில் பிரயாணத்திற்கு டிக்கட் பெறுவதற்காக யாழ். விளையாட்டு அரங்கிற்கு நேற்றுக் காலை வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதே வேளையில் நேற்று யாழ் தேவியில் கொழும்பு செல்வதற்காக இரண்டாயிரம் ரூபாவுக்குமேல் பெறுமதி

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ வடமாகாணத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பின்றி சுயாட்சி கிடைக்க வழியுண்டா?

## இந்திய - இலங்கை சட்ட நிபுணர்கள் ஆராய்கின்றனர்

(புதுடில்லி)

சர்வஜன வாக்கெடுப்பின்றி வடமாகாணத்திற்குச் சுயாட்சி வழங்க முடியுமா என்பதுபற்றி இலங்கையிலிருந்து இங்கு வந்துள்ள சட்ட நிபுணர்கள்குழு இந்திய சட்ட மா அதிபருடன் ஆலோசித்து வருகிறது.

தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் வடமாகாணத்திற்கு இன்றைய அரசியல் அமைப்புக்கு உட்பட்டவகையில் சர்வஜன வாக்கெடுப் பின்றி எவ்வாறு சுயாட்சி வழங்கலாம். என்பது பற்றி திரு எச். டபிள்யூ. ஜயவர்த்தன தலைமையிலான குழு விரிவான பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டு வருகிறது.

இன்றைய நிலையில் இது பற்றிச் சர்வஜனவாக் கெடுப்பு நடத்தப்படுமானால் அது பல் வேறு அரசியல் பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடும் என இவர்கள் நம்புவதாகத் தெரிகிறது.

இதேவேளை அரசியலமைப்புக்குத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் உத்தேச மாகாணசபைகளுக்கு நேரடித் தேர்தலை நடத்தி முழு அளவிலான சட்டசபை அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்று இந்திய சட்ட நிபுணர்கள் கருதுகின்றனர்.

## வவனியா, அனுராதபுரத்திற்கு அமைச்சர் லலித்திடீர் விஜயம்

[கொழும்பு]

தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி வவனியாவுக்கும் அநுராதபுரத்திற்கும் நேற்றுத் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

அநுராதபுரம் இராணுவ முகாமிற்குச் சென்ற அமைச்சர் லலித், அண்மையில் கைதாகித் தடுப்புக் காவலிலிருக்கும் தமிழ்த் தீவிரவாதிகளைச் சந்தித்து உரையாடினார். இவர்களில் இருவர் தாம் தென்னிந்தியாவில் பயிற்சி பெற்றதாகவும் அமைச்சரிடம் தெரிவித்தனராம்.

மன்னாரில் தாக்கப்பட்ட தீவிரவாதிகளின் முகாம் புலிகள் இயக்கத்தின் மாவட்டத் தலைமைக்காரியாலயமாயிருக்கலாமென்று இத் தாக்குதலை நடத்திய கொமாண்டோக்கள் அமைச்சரிடம் தெரிவித்ததாகவும், இயக்கத்தினர் இரவுச் சாப்பாடு தயாரித்துக் கொண்டிருந்தவேளை முகாமைத் தாக்கியதாகக் கூறியதாகவும் இலங்கைவானொலிச் செய்தி கூறியது.

## இது நாசவேலையா?

## யாழ். செயலகத்தில் ஓய்வூதிய ஆவணங்கள் தீக்கிரை!

## தீய செயல்களை ஒழிப்பதற்கு ஒத்துழைப்புக் கோருகிறார் அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு யாழ். செயலகத்தின் கிழக்குப் பக்கமாக வாகனம் நிறுத்துமிடத்திற்கு அருகிலுள்ள மூன்று களஞ்சிய அறைகள் தீக்கிரையாகியுள்ளன.

"இக்கட்டிடத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஆவணங்களும் படிவங்களும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் ஓய்வூதியம் பெறுபவர்கள் மிகப் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்பதை மனவருத்தத்துடன் பொதுமக்களுக்கு அறியத்தரவேண்டிய நிலையிலுள்ளேன்" என்று இத்துரதிஷ்டசம்பவம்பற்றி யாழ் அரச அதிபர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உள்ளகக் கணக்

(6-ம் பக்கம் பார்க்க)

## எஞ்சியிருந்த 100 வீடுகளும் தீக்கிரை

திருமலை)

மூதூரில் எஞ்சியிருந்த கட்டைபறிச்சான், சேனையூர், சம்பூர் ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 100 வீடுகள் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

## பேரின்பநாயகம் ராஜினாமா

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்காவின் செயலாளர் திரு. ஆர். பேரின்பநாயகம் தமது ராஜினாமாக் கடிதத்தை எதிர்கட்சித் தலைவரிடம் நேற்று சமர்ப்பித்தார்.

இந்தக் கடிதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு இது சம்பந்தமான முடிவு எடுக்கப்படும்.

## 100-க்கு அதிகமானோர் மாண்டிருக்கலாம்!

அரசாங்கம் அறிக்கை

[கொழும்பு]

மன்னாரில் இடம்பெற்ற இராணுவ கொமாண்டோக்களின் அதிரடித் தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்திருக்கலாம் என்று அரசு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தது

அண்மையில் மன்னாரில் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின்போது பல முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டதாவும், இதில் தமிழீழ விடுதலைப் புலிகள்

[6ம் பக்கம் பார்க்க]

## "திருகோணமலையில் 6 நாட்களில் 22 தமிழ்க் கிராமங்கள் தாக்கப்பட்டன"

(சென்னை)

"அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் தாக்குதலுக்குள்ளான கிராமங்கள் யாவும் பல காலமாகத் தமிழர்கள் வசித்துவரும் கிராமங்களாகும் அங்கு தாக்கப்பட்டவர்களும் தமிழர்களேயாவர்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், திருகோணமலை முன்னாள் எம். பி. திரு. ஆர்.

[6ம் பக்கம் பார்க்க]

## பனம்பொருள் கண்காட்சி: 20 ஆயிரம் மக்கள் பார்வையிட்டனர்!

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த மூன்றுதினங்களாக நடைபெற்ற பனம்பொருள் உற்பத்திக் கண்காட்சியில் மூன்று தினங்களும் இருபதினாயிரம் பேர்வரை பார்வையாளர்களாகக் கலந்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பிரிவினர் தெரிவித்தனர்.

மகாபொல கண்காட்சியின் போது விற்பனையான பனம்பொருட்களைவிட யாழ். பல்கலைக் கழகக் கண்காட்சி விற்பனை அதிகரித்திருந்ததாக இச் சபையின் சந்தைப்படுத்தும் பிரிவினர் தெரிவித்தனர்.

## பஸ்சேவை நிறுத்தம்

(வவனியா)

வவனியா- திருகோணமலைக்கான இ. போ சபை பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

## ரூ. 3 லட்சம் தங்கம் கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

இந்திய பாஸ்போட் வைத்திருந்த ஒருவர் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்களைக் கடத்த முயன்றபோது கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சுங்க அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# விளம்பரம்

## விற்பனைக்கு

சகல வசதிகளும் உள்ள வீடு இரண்டு பரப்புக் காணியுடன் மானிப்பாய் தெற்கில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி விமலநாதன், புளியடிச் சந்தை. மானிப்பாய் தெற்கு. 3806

காது கேட்கும் கருவி (Hearing Aid) ஒன்று உடன் விற்பனைக்குண்டு- Make: 'RIONET' Japan. தொடர்பு: அம்பாள் ரேடிங் என்ரைபிறைஸ், 234, ஸ்ரான்லிவீதி. யாழ்ப்பாணம். தொ. பேசி: 23818. (3819)

உரும்பராயில், கோப்பாய் வீதியில் வீடுகட்டக் கூடிய நல்ல தண்ணீர் உள்ள, இரண்டரை பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: K. M. கனகசிங்கம், கற்குளம்வீதி, கோப்பாய் ரோட்டு, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 3799

1'' முத்திய, காய்ந்த வேப்பம்பலகைகள் விற்பனைக்குண்டு. நி. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3841

யாழ். பாங்சால் வீதி இல: 81 இல் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: V T. and Sons, 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3853

மாவடிச்சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கு ஏற்ற 3½ பரப்புக் காணியை அரைவாசியாக (1¾) பரப்பாக வாங்கக்கூடியவர்களுக்கு விற்கப்படும். திருமதி இராமநாதன் மகேஸ்வரி, அபரர் வே. நாகலிங்கம் J.P U M., அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோவில் வீதி, வட்டுக்கோட்டை. 3769

மினி சினிமாவிற்கு பாவிக்கப்படும் ரி வி லென்ஸ் 3² அங்குலம் (Baamscope 32'') கைவசவம் எம்மிடம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மினி ரேட் சென்ரர், J. M. C கட்டிடம், No. 3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3863

Kelvinator குளிர்சாதனப் பெட்டி, சோனி கலர் ரி. வி. (20 '), சாப்பாட்டு மேசை, விரிப்புக்கண்ணாடியும் ஆறு வெள்ளி முலாம் பூசிய கதிரைகளும், பாவிக்காத G. C E 17,000 BTU A. C., மற்றும் காஸ் அடுப்பும், ஓவனும், பொலிங் இரண்டு அடுப்புக் குக்கர், பாவிக்காத Scrabble Set. 15, கண்டி ரோட், சுண்டிக்குளி, டெலிபோன்: 24092. (3834)

## தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியிலோ அல்லது அதற்கு அண்மையிலான பகுதியிலோ வீடு கட்டுவதற்கான காணி அளவான விலையில் நல்ல சுற்றுடலில் தேவைப்படுகின்றது. உங்களது ஆகக் குறைந்த விலையைக் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம்; 3837 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 3837

## WANTED

Wanted a female English Typist with fluent English knowledge for immediate employment. Salary negotiable Apply: Devi Plaza, No. 2, Stanley Road, Jaffna 3851

## MATRIMONIAL

Parents seek for son graduate M Sc. fair permanent resident United Kingdom professionally qualified Bride fair around Thirty MBBS resident U. K. preferred. Advt. No. 3852, C/o Eelanadu. Jaffna 3852

## தவறிவிட்டது

15-6-85 அன்று தாவடிச் சந்திக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் 85 ஸ்ரீ 5536 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் தஸ்தாவேஜுக்களும், ஒரு கணக்குக்கொப்பியும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். குறாஸ், நியூ மார்க்கட், இல. 13, சுன்னாகம். 3861

சென்ற ஞாயிற்றுக்கிழமை (09-06-85) கொழும்புக்குப் பிரயாணம் செய்கையில் கோப்பாய் சந்திக்கும் ஆனையிறவுக்குமிடையில் எனது றவெல் பாக் (Travel Bag) தவறிவிட்டது. இதற்குள் ஒரு முக்கிய திருமண வைபவத்தின் புகைப்படச்சுருள் இரண்டு இருந்தது. கண்டெடுத்தோர் கருணை கூர்ந்து நேரிலோ அல்லது வேறு நபர் மூலமோ எனது பொருட்களை (முக்கியமாக படச்சுருள்கள்) தந்துதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்டவர் மனிதாபிமானமானமுறையில் கருதப்படுவர். தொடர்பு: பிலிப்ஸ் றவெல்ஸ், 3-ம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 3867

## வைத்தியம்

நோய்பிணி துன்பம் நீங்கி இனிது வாழவும், பேய்பிசாசு கோளாறுகளிலிருந்து விலகிக் கொள்ளவும். வியாபார ஸ்தலங்கள் வீடுகள் முதலியன காவல் பண்ணவும், கடற்தொழில் விருத்தி. வியாபார விருத்தி முதலியவற்றிற்கு இயந்திரத் தகடுகளும், துவாக்களும் செய்துகொடுக்கப்படும். குறிப்பு: (வெளிநாடுகளில் பிரபலமிக்கவர்) இறைவனின் சக்தியினால் மலையாள முறையில் உடன் செய்து கொடுக்கப்படும். முகவரி: ஷாஹி ஷிபா ஆத்ம ஆரோக்கிய நிலையம், இல: 125, பீச்-ரோட். யாழ்ப்பாணம் 3777

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, இல. 392/1 யைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணமெய்திய சிலனத்தம்பி நடராசா என்பவரின் மரணச்சொத்து விடயத்தில்.

—மரணமெய்தியவர்

நடராசா பாலேந்திரன் இல. 392/1 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

எதிராக:

வழ. இல. மரணசாதன நியாயாதிக்கம்
T.3888

1. சின்னத்துரை ஸ்ரீ தரனும் பெண்
2. கௌரிதேவியும் இருவரும் 320, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
3. வல்லிபுரம் மாணிக்கலிங்கமும் பெண்
4. இந்திராணியும்.
5. குணநாயகம் ஜெயசீலனும் பெண்
6. விஜயராணியும் எல்லோரும் 392/1 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

—எதிர்வாதிகள்.

மேலே குறிப்பிட்ட இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு. அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு ஆடி மாதம் 26-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
த. சோமசுந்தரம்,
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,
மனுதாரின் சட்டத்தரணி.
93/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். 3835

(1) வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு 21% தொடக்கம் 25% வரை (வருடமுடிவில்) 20% தொடக்கம் 24% வரை (மாதாந்தம்) வட்டி கொடுக்கப்படும்.


(2) யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அண்மையில் ஏழாலை மயிலங்காட்டில் 27 பரப்பு.

விபரங்களுக்கு:-
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல் மாடி யாழ்ப்பாணம்.
போன்: 23698

## அச்சுக்கோப்பாளர்கள் உடன் தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பிரபல தமிழ்ப் பத்திரிகையொன்றிற்கு அச்சுக்கோப்பாளர்கள் உடன் தேவை. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கிராமசேவையாளரின் சிபார்சுக் கடிதம், முன்பு வேலைசெய்த ஸ்தாபனத்தின் நற்சான்றிதழ்களின் பிரதிகளுடனும், தேசிய அடையாள அட்டையின் இலக்கத்துடனும் 19-06-85 (புதன்)க்கு முன் எழுத்தில் விண்ணப்பிக்கவும் .யாழ். மாநரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விளம்பர இல. 3856 C/o ஈழநாடு லிமிட்டெட், தபாற்பெட்டி இல. 49, யாழ்ப்பாணம். 3856

## நினைவு அஞ்சலி



தோற்றம்: 6-2-1927

மறைவு: 14-5-1985

### சங்கரப்பிள்ளை செல்வராசா

புகையிரதநிலைய அதிபர், மதவாச்சி

எங்கள் அன்புத் தெய்வமாய் எமது குடும்பத் தலைவனாய் எங்களுக்காய் வாழ்ந்தாய். ஆனால் தியாக ஒளிச்சுடராய் நடுவில் மறைந்துவிட்டாய்.

''God is for us a Refuge and Strength, a help That is readily to be found during distress''

அன்பு மனைவி, மக்கள், மருமகன், பேரன் மற்றும் குடும்பத்தினர்

அன்னாரின் இறுதிச் சடங்கிலும் எமது துயரத்திலும் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பற்பல விதத்தில் உதவிசெய்தவர்களுக்கும் விசேஷமாய் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் புகையிரதநிலைய ஊழியர்களுக்கும் வவனியா அரசாங்க அதிபருக்கும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, மற்றும் ஊழியருக்கும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைவர் மற்றும் உத்தியோகத்தர், சாரதி நடத்துனருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

திருமதி பி. செல்வராசாவும்
குடும்பத்தினரும்,

11/1 Hensman Lane,
Chavakachcheri. 3862

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறிவித்தல்

நயினை நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் மகாசபை உறுப்பினராகத் தம்மைப் பதிவுசெய்துகொள்ளவிரும்பும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வதிபவரும் இருபத்தொரு வயதிற்கு மேற்பட்டவரும். ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றம் எதிலும் தண்டிக்கப்படாதவரும் சைவசமயத்தவருமான ஆள் எவரும். கீழ்வரும் படிவத்தில் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பத்துடன் ரூபா பத்துக்குரியதும் ''பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு'' என்ற பெயருக்கு எழுதப்பட்டதுமான தபாற் கட்டளையையும் இணைத்து ஆண்டு தோறும் யூன் 30-ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாகச் செயலாளருக்கு அனுப்பி விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

(வ. இ. க. இரத்தினசபாபதி ஜே. பி.)
செயலாளர்,
அறங்காவலர் சபை.

### மாதிரிப் படிவம்

1. முழுப் பெயர்: ....................................
2. தபால் விலாசம்: ....................................
3. சமயம்: ....................................
4. பிறந்த திகதி: ....................................

மேற்காணும் விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றமெதற்கும் நீதமன்றமெதிலும் தண்டிக்கப்படவில்லை எனவும் உறுதி கூறுகின்றேன்.

....................................
விண்ணப்பதாரர் ஒப்பம்.

என் முன்னிலையில் ஒப்பமிட்டார்.

....................................
சமாதான நீதவான்.

திகதி: ........................
இடம்: ........................

1. விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரிகள சொந்தமாகத் தயார்செய்து கொள்ள வேண்டும்.
2. விண்ணப்பங்கள் கோவில் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடப்பட வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப் படவேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பத்தைக் கொண்ட உறையின் இடது பக்க மூலையில் ''வழிபடுநர் மகாசபை உறுப்புரிமை விண்ணப்பம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3847

## மணிவாக்கு

ஜனநாயக சித்தாந்தத்தை செவ்வனே புரிய வேண்டுமானல், நூல்நிலையங்களில் காணப்படும் அரிய ஆராய்ச்சி நூல்களைப் புரட்டுவதிலும்பார்க்க, பஸ்ஸிலும், றெயிலிலும் பயணஞ்செய்யும் சாதாரண மக்களுடன் சம்பாஷிப்பது அதிகபலன் அளிக்கும்.

— ஒரு அறிஞர்

# நமது நோக்கு

## மகிழ்ச்சிகரமான முடிவு

பயிற்சியும் அனுபவமுமுடைய விமான பைலட் ஒரு நாட்டின் பிரதமராக விருப்பதற்குத் தகுதிபெற்றவரென்பதை ரஜீவ்காந்தி கடந்த ஏழு மாதங்களில் காட்டியுள்ளார்

இந்த ஆட்சி உலகப்புகழ் பெற்ற, எதனையும் சமாளிக்கவல்ல அன்னையார் இந்திராவின் சடுதி மறைவுடன் ஆரம்பமானது தேசத்தின் பொறுப்பை பெரும்பான்மை வாக்கால் மகனுக்கு அளித்த இந்தியமக்கள் அன்னையின் கொள்கையை — பரவலாக வறுமைப்பட்ட 'சமூகத்து' மீட்சிகாணும் பணியை — ஆதரித்தர்கள் என்று கொள்ளலாம்.

இன்று இந்திய மக்களின் நல்வாழ்வில் கணிசமான முன்னேற்றம் காணத்துடிக்கும் இளமை மிகுந்த பிரதமர் இதற்கு எதிராகக் காணப்படும் சக்திகளை தம்மிடச் செய்ய முயல்கின்றார்.

உலகிலே சமாதானம் நிலவுவதற்கு ஆயுதப் போட்டி நீங்க வேண்டுமென்பது அவருடைய ஒரு பரவலான நோக்கம். சென்றவிடமெல்லாம் இதனை விக்கிப் பிரசாரம் செய்கின்றார்.

அதேசமயம் தெற்காசியாவில் தோன்றி வளர்ந்து வரும் பகைமைகளை இனங்கண்டு அவற்றிற்கு அரசியல் சமாதானமே பரிகாரமென்று தமது கொள்கை உறுதியை நிலைநாட்டி வருகிறார்.

மாஸ்கோவில்மட்டுமல்ல, வாஷிங்டனிலும் அந்தநிலையிலிருந்து இம்மியும் விலகவில்லையென்பதை நீகன் வரவேற்காமலிருக்கலாம். ஆனால் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று சிந்தித்து, பேசி, செயலாற்ற வல்ல தலைவர் கையில் இன்று இந்தியா இருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக ஆப்கான் பிரச்னையே இந்தியாவில் ஒரு ஸ்திரமற்ற பதற்றநிலைக்குக் காரணமென்று அமெரிக்க தலைவர்களுக்கு விளக்கியதோடு, பாகிஸ்தானுக்கு நவீன ரக ஆயுதங்கள் அமெரிக்கா உதவுமானல் அணுகுண்டு தயாரிப்பதில், கண்டும் காணுதமாதிரி நடக்குமானல், இந்திய ராணுவ பலம் அதற்கேற்ற முறையில் அதிகரிக்கப்படுமென்று உறுதியாக உரைத்திருக்கிறார்.

எனவே அமெரிக்க ராணுவ உதவி அவசியமற்றது என்பது அமெரிக்க அரசியல் தலைவர்களை சிந்திக்க வைக்கும்.

எடுத்த விடயத்துக்கு நேரில் போகும் திறமையுடையவர், எதிரியையும் தன்பக்கம் மாற்ற முடியாவிட்டாலும் தான் சொல்வது நியாயமானதென்ற நம்பிக்கை ஏற்படுத்த வல்லவர்; வெள்ளை உள்ளம் படைத்த நல்லவர் என்பது அதிலிருந்து தொடரும் உண்மை.

சீனப் பிணக்கை இந்தியாவின் பலவீனமாகக் கொண்டு அண்டை நாடுகள் யாவும் இந்தியாவில் குதிரை விடலாமென நினைப்பது ஓரளவிற்கு உண்மை.

எனவே சீனவுடன் எல்லைப் பிரச்னையைத் தீர்க்க முயல்வது விவேகமே. அதேபோல ஆப்கான் பிரச்னை சமாதானத்தீர்வு கண்டால் இலங்கை எம்மாத்திரம்! இந்தியாவின் உறுதி பெற்ற ஆட்சிக்கு இலங்கை சவால் விடுதல் மடைமை,

நாமிதுகாறும் கூறிவந்த கருத்து எங்கள் உள்ளூர் பிரச்னையை இத்தகைய மோசமான நிலைக்குவளர்த்துவந்த இலங்கை அரசு இந்தியாவின் பிரதமர் ரஜீவின் தூய நோக்கத்தையும் அத்தூய்மை ததும்பும் ராஜதந்திரத்தையும் வேளைக்குப் புரியாமல் விட்டமையே.

வெள்ளம்வந்தபின் அணைகட்டும் வேலை நடைபெறுகிறது; உண்மையில் அணை கட்டப்படுகிறதோ அல்லது வந்தியின் பிட்டுக்காக மதுரைச் சோமசுந்தரர் காலம் கழித்தது போல் முடியுமோ என்ற சந்தேகம் உண்டு.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா இன்று கேட்பது திருகோணமலைச் சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு. தமிழ்மக்களின் மானத்தையும் பண்பாட்டையும் பயங்கரவாதிகள் அழிதது வருகின்றனவென்பது பாதுகாப்பு அமைச்சரின் இன்றைய பிரலாபம்.

நிலைமை எவ்வாறிருக்கின்றது? எங்குபோய் முடியும்? நீதியின் குரல் இன்றுவது ஒலிக்கவேண்டுமென்பதால், நாட்டின் நீதிக்கு ஒரு பிரதி அமைச்சர் உண்டென்று நாம் முன்னர் குறிப்பிட்டது போல், திரு. ஷெல்டன் ரணராஜ நிலைமையை மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறார் கைவிடப்பட்ட 'சீ' அனுபந்தம் இன்றைய அழிவைத் தடுத்திருக்குமென்கிறார்.

ஒவ்வொருகட்சியும்தத்தம் கருத்தை ஆகக்குறைந்தகோரிக்கையை சமர்ப்பிக்கட்டும்; 'நியாயமானது' என்ற தெளிவற்றசொல்லைக் கைவிட்டு திடமான கருத்தை முன்வைத்து தெளிவான முடிவுக்கு வர உதவினல் நாட்டின் தலைவர் எதுசரியென்று தீர்மானிக்கவேண்டும். மக்களைப் பின் தொடருவது அவருடைய தலைமைக்குதவாது.

பாசாங்கு தொடருமானல் பாண்டியன் பிரம்பு முழுமுதற்கடவுள் மேல் பட்டதும் என்ன நடந்ததென்பது நினைவில் இருக்கட்டும்.

## மினி பஸ் சேவை

[வவனியா]

வவனியா - கொழும்பு தனியார் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் இங்கிருந்து இரு தனியார் பஸ்கள் காலை கொழும்பு புறப்பட்டுச் செல்கின்றன.

# உலக மேடை

## மாஸ்கோ

இன்றைய உலக தலைநகரங்களில் மாஸ்கோ முன்னணி வகிக்கிறது.

சோவியத் ரஷ்ய ஆட்சி மாஸ்கோ என்ற பெரு நகரின் நகரமான கிரெம்ளின் என்ற பாதுகாப்புடைய பெருங்கோட்டையில் அமைந்திருக்கிறது. வேற்று நாட்டு தலைவர்கள் யாராயிருந்தாலும் அங்கு விருந்தினராய் வரும்போது கிரெம்ளினுக்குள் வாசம்செய்யும் உரிமைகிடைப்பதில்லை: இதற்கு புறநடையானவரே இந்தியப் பிரதமராகஞ்சென்ற இந்திராகாந்தி இன்று அந்தக்கௌரவம், அவருடைய மகன் ரஜீவுக்கும் கிடைத்திருக்கிறது. சோவியத் தலைவர்கள் இன்று இந்தியாவை எவ்வளவு தூரம் நம்பி நட்பின் பெருமையை விளக்க முயல்வதை இது குறிக்கின்றது. பிரதமர் நேருவிலும் பார்க்க, மிகநெருக்கமாகப் பழகி சோவியத் மக்களினதும், தலைவர்களினதும் விசுவாசத்தை இந்திரா பெற்றமையால், இன்று ரஜீவுக்கு இத்கௌரவம் கிடைத்திருக்கிறது.

## இளந்தலைவர்கள்

இளம் தலைவர்கள் ரஷ்ய, இந்திய ஆட்சியில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ரஷ்ய பெருந்தலைவர்களின் வயதை ஒப்பிட்டால் 54 வயதுடைய கொர்பச்சோவ் இளையவரே. நன்கு ஆங்கிலம் பேசும் புதியதலைவரும் அவருடைய பட்டதாரி மனைவி திருமதி றேயிஸாவும் மக்களுடன் அளவளாவும்பண்புடையவர்கள். சோவியத் ரஷ்ய வாழ்வின் நடைமுறையில் இது ஒரு சிறுமாற்றம்.

ராஜீவ் காந்தியும் சோனியாவும் அவர்களின் விருந்தோம்பலை நன்றாக ரசித்தார்கள். ரஷ்ய கம்யூனிச வைதீக வழக்கங்கள் யாவும் இந்திய விருந்தினர் வருகையில் கைவிடப்பட்டது. லெனின் சமாதியில் பாட்டனர் நேருவைப் போல் ரஜீவ் மலர்வளையம் சாதியபோது கண் கலங்கியதும், ஹிட்லரின் போரில் உயிரிழந்த இரண்டுகோடி ரஷ்ய வீரரின் சமாதி நினைவாலயத்தைப் பார்த்து சோகமுற்றதும் வரலாற்றில் இடம்பெறும் பிரபல நிகழ்ச்சிகள்.

## ரஷ்ய இளந்தலைமுறை

54 வயதுடைய புதிய தலைவரும் அவருடைய கவர்ச்சிமிகும் இளம் மனைவியும் 40வயதுடைய இளம் இந்தியப் பிரதமர் ரஜீவுடனும் அவருடைய இத்தாலிய இளம்மனைவி சோனியாவுடனும் நடந்து கொண்ட முறை கிரெம்ளின் தலைவர்களுக்கே ஒரு சிறு அதிர்ச்சி ஏற்படுத்தியது இது கட்சிமாற்றததிற்கு சற்றேனும் வழிவகுக்காது. கண்டிப்பு இளகுகின்றதென்றே சொல்லலாம்.

இன்னும் ஜனதிபதியாக நியமனம் பெருதகோர்பச்சோவ் பல சிரேட்ட தலைவர்களுக்கு மேலாகப் பொதுக் காரியதரிசியாக தெரிந்தெடுக்கப்பட்டதால் விரைவில் அப்பதவிக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கம்பீரமான தோற்றமும் நவீன சமூகத்திற்கு உரித்தான பண்புமுடையவரென்பதால் கம்யூனிச கட்டுப்பாட்டிலும் லட்சியத்திலும் மாற்றம் காணலாம் என்று எண்ணுவது தவறு மிகக்கண்டிப்பானவர், ரஷ்யாவில் குடி என்னும் கோடான பழக்கத்தை அகற்ற அரும் பாடுபடுகின்றார். சமுதாய அமைப்பு வேறுபட்ட போதும் ரஷ்ய இந்தியத் தலைவர்கள் இருவரும்தத்தம்தேசங்களில்ஒரு புதுசகாப்தம் காண்பார் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

## பிரிட்டன்

கடந்த 20 வருடங்களாக இனத்துவேஷம் பிரிட்டனில் அரும்பி வந்தது. ஆனல் அது தலைதூக்க முடியவில்லை. காரணம் பண்டைய பண்புடைய சுதந்திர நாடு பிரிட்டன். ஆனல் இன்று அங்கு வந்து குவியும் ஆசிய, ஆபிரிக்க மக்கள் இனவெறித் தலைவர்களுக்குத்தூபமிடுகின்றனர் தேசிய முன்னணி [N. F] என்ற இயக்கம் இதற்கு பலமளிக்கிறது. இருப்பிடங்களை மட்டுமல்ல வேலைத்தலங்களையும் பிரிட்டிஷ் மக்கள் தங்கள் சொத்தாக்கவேண்டும்; என்பது இக்கட்சியின் தாரக மந்திரம். இதனல் எடுபடும் பிரிட்டிஷ் மக்கள் மிகச் சிலரே ஆகக்கூடியது 2000 பேரே, இந்த ஆவேசப் பேர்வழிகளை ஆதரிக்கின்றனர்; ஆனல் இவர்கள் வன்முறைச் சம்பவங்களை தூண்டவல்லவரென்பதை மறந்துவிடக்கூடாது.

பிரதமர் திருமதி தாட்சர் தம்முடைய கட்சிக்குள்ளே பிளவு இருக்கிறதை அறிவார். முந்திய அமைச்சரவை அங்கத்தவர் பிம் ஒரு புதிய குழுவினரை அமைத்து கட்சிக்குள் கட்சியாக இருந்து தாட்சரின்கொள்கைகள் பிழையென்றபோது அவற்றை எதிர்க்க முயல்கின்றார்.

அண்மையில் பிரஸல்ஸில் நடந்த அகிலஉலகக் கிண்ணத்திற்குரிய உதைபந்தாட்டப் போட்டியில் தோல்வியடைந்த பிரிட்டிஷ் குழுவினர் நடத்திய பேரழிவு பிரிட்டிஷ் மக்களின் வரலாறுமிக்க பண்புக்கு அழியாப்பழியை ஏற்படுத்தியிருக்கிறது.

## அமெரிக்கா

Capitol-கப்பிற்றேல் என்ற மலைச்சாரலில் அமைந்திருக்கும் மாளிகை சிரகரத்தில் 'சுதந்திரம்' என்ற பெண்மணியின் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது இந்தக் கம்பீரமான மாளிகை வாஷிங்டன் தலைநகரின் கேந்திரஸ்தானம்; இங்குதான் கடந்த வியாழக்கிழமையன்று, இந்தியத் தலைவர் எவருக்கும் இலகுவில் கிடையாத உரிமை பாரதப் பிரதமர் ரஜீவுக்கு கிடைத்தது. பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒன்ருகக் கூட்டப்பட்டு பிரமுகர் பலரை ரஜீவுக்கு அறிமுகம் செய்தபின் அந்த அதிகாரம் மிகுந்த ஜனநாயக சபைக்கு பிரதமர் ரஜீவ் பேருரை நிகழ்த்தினர். அடுத்தநாள் பிரபல பத்திரிகைகள் யாவும் அதனைப்

### உலகம் சுற்றி

பாராட்டி விமர்சனங்களும் ஆசிரியத்தலையங்கங்களும் தீட்டின.

## "இந்தியத் திருவிழா"

ரஜீவின் பாரிஸ் விஜயத்தில் முக்கியமான நிகழ்ச்சி, இந்திய திருவிழாவை ஜனதிபதி மித்திரானும் ரஜீவும் ஆரம்பித்து வைத்தனர். ஆனல் வாஷிங்டனில் இன்று நடைபெறும் இந்தவிழா, இந்திரா 11 வருடங்களுக்குப்பின் 1980ல் அமெரிக்கா சென்றபோது றீகனுடன் கலந்தாலோசித்ததின் நற்பயனே மிகப்பெருஞ் செலவில் சுமார் 3 வருட காலமாக ஆயத்தமான இப்பெருவிழா, இந்திய - ஆசிய நாகரிகத்தின் பல ஆழமான கருத்துக்களை அமெரிக்க மக்களுக்கு எடுத்துரைக்கவல்லது.

இந்திய நாட்டில் இதற்குக் கண்டனம் இல்லாமற்போகவில்லை, "எந்த இந்தியாவின் திருவிழா" என்றும் "யாருடைய இந்திய திருவிழா" என்றும் கேட்கப்பட்டு ஒரு தனிமனிதனின் கையில் 200 விடயங்களின் தீர்மானம் இருந்ததைக் கண்டித்தவர்கள்; பரத நாட்டியம் என்ற பண்டைய கலையை ஒருபுறம் ஒதுக்கிவிட்டதும் திருமதி ருக்மணிதேவியின் பெயரை எங்கும் காணவில்லை என்று காரணம் காட்டுகின்றனர்.

அமெரிக்க தேசத்தின் பல பாகங்களுக்கு இந்த விழா பரவுமென நம்பப்படுகிறது.

## ஜப்பான்

செல்வத்தில் திளைத்துக் கூத்தாடும் ஜப்பான், வர்த்தகத்தில் அமெரிக்காவுடன் முரண்டிக்கொள்ளும் சந்தர்ப்பத்தில், அதனை முறியடிக்க தாரளமான இறக்குமதி அமெரிக்க உற்பத்திக்கு அளிக்கவேண்டுமென ஜப்பானிய பிரதமர் நாகசோனியே கட்டளையிட்டிருக்கிறார்.

இவ்விதமான தாராள இறக்குமதி, வர்த்தகத்தில் சுழியோடவல்ல ஜப்பானுக்கு ஏற்றுமதியில் லாபம் காட்டுமென்ற நம்பிக்கை உண்டு.

செல்வம் கொழிக்கும் நாடென்றுலும் அமெரிக்காவின் குபேர வாழ்வுடன் போட்டியிட வேண்டுமென்ற பேராசை ஜப்பானுக்குஉண்டு.

பண்டைய வைதீக வாழ்வு முற்ருக அற்றுப்போகாவிட்டாலும், இன்றைய ஜப்பானிய இளம் ஆண்களும், பெண்களும், தங்கள் மேனியை அழகுபடுத்த, சினிமா நட்சத்திரங்களின் பார்வைக்கேற்ற வகையில் சத்திரசிகிச்சையில் பெருமளவு ஈடுபடுகின்றனர். Cosmetic Surgery என்ற மருத்துவத்துறை ஜப்பானில்பெரும் கிராக்கி ஏற்படுத்தியிருக்கிறது. உடம்பின் எப்பாகமும், சிறப்

(6ம் பக்கம் பார்க்க)

## முத்துமாரியம்மன் போற்றிப்பா

ஆராத காதலொடும் அணைப்பாய் போற்றி
அணைத்தன்பை யநுதினமுந் தருவாய் போற்றி
ஒராதா ருள்ளொளிரா தொளிப்பாய் போற்றி
ஒளித்துள்ளம் நெக்குருகச் செய்வாய் போற்றி
பாராத பார்வையெலாம பார்ப்பாய் போற்றி
பார்ப்பவர்க்கும் பார்ப்பரிய பரமே போற்றி
சேராதே சேர்ந்திலங்குஞ் செழிப்பே போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.
நற்றவர்க்கும் நலனுய நலனே போற்றி
நவநிதியந் தருபுனித நதியே போற்றி
கற்றவர்க்குச் சுனிபான கனியே போற்றி
கவினூறு தமிழினிமை கலந்தாய் போற்றி
அற்றவர்கரும் அருந்துணையா மன்னுய் போற்றி
அம்மைநோய் தீர்த்தருளும் அமுதே போற்றி
செற்றவர்க்குஞ் செயலின்மை செய்வாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி

— ச. தங்மாமயிலோன்

○ திருநெல்வேலி முத்துமாரியம்மன் திருவிழா நேற்று ஆரம்பமானது.

## ● ‘ரி. டபிள்யு. எ.’ விமானக்கடத்தல் தொடருகிறது!

# மத்திய தரைக்கடல் பகுதிக்கு அமெரிக்க ‘டெல்ற்ரா’ படைவிரைவு!

அல்ஜியர்ஸ், ஜூன் 16

அல்ஜீரியாவில் அமெரிக்க ‘ரி. டபிள்யு. ஏ.’ விமானம் கடத்தல்காரர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதையடுத்து அமெரிக்காவின் ராணுவ அதிரடிப்பிரிவொன்று மத்தியதரை கடல்பகுதிக்கு நேற்று விரைந்தது. இப்பிரிவின் நடவடிக்கைகள் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டுள்ளன.

‘டெல்ற்ரா’ என்ற இந்த விசேட அமெரிக்க ராணுவ அதிரடிப்பிரிவு, மத்தியதரைக் கடல் பிராந்தியத்துக்கு விரைந்துள்ளதை வாஷிங்டன் வட்டாரங்கள் அறிவித்துள்ளன

இதேவேளை அமெரிக்க விமானக்கடத்தல் நாடகம் தொடர்ந்து இடம்பெறுகிறது அல்ஜியர்ஸ் விமான நிலையத்தில் கடத்தப்பட்ட ரி டபிள்யு ஏ விமானம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது கடந்த சனிக்கிழமை கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் இந்த விமானம் கடத்தப்பட்டது. தொடர்ந்து பெய்ரூட்டுக்கு இது கொண்டு செல்லப்பட்டு தற்போது அல்ஜீயர்ஸ் விமானநிலையத்தில் இவ்விமானம் நிறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கடற்படை அதிகாரியான பயணி ஒருவர் மட்டுமே இக்கடத்தலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கிரேக்கத்தில் கைதுசெய்யப்பட்ட தமது சகா ஒருவரை விடுதலை செய்யும்படி இக் கடத்தல்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். கிரேக்க அரசு இக்கோரிக்கையை ஏற்று அந்நபரை விடுதலை செய்தது.

இதனைத் தொடர்ந்து சுமார் 6 விமானப் பணிப்பெண்கள் உட்பட 66 பயணிகள் விடுதலை செய்யப்பட்டனர். சுமார் 140 பயணிகளே தொடர்ந்து பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

லெபனானின் பன்னிரெண்டு துப்பாக்கி நபர்களே இவ்விமானத்தைக் கடத்தியுள்ளனர். இஸ்ரேலிய அரசு சிறைவைத்துள்ள தமது சுமார் 700 சகாக்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் தென்லெபனானிலிருந்து இஸ்ரேலிய ஆதரவுடனான படைகள் அனைத்தும் வாபஸாக வேண்டுமென்பதும் இக்கடத்தல்காரர்களின் பிரதான கோரிக்கையாகவுள்ளது.

இக்கோரிக்கையை ஏற்பதற்கான காலக்கெடு இன்று பிற்பகல் இரண்டுமணிவரை விதிக்கப்பட்டிருந்தது. தவறும்பட்சத்தில் அவ்விமானம் பெயர் குறிப்பிடப்படாத இடமொன்றுக்குக் கொண்டுசெல்லப்பட்டதென்று தெரிவிக்கப்பட் டது. (கி)

## காங்கேசன்துறையை 5 கல்வி வட்டாரங்களாக பிரிக்க திட்டம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை கல்வி வட்டாரம் 5 வலயங்களாகப் பிரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஜனவரி முதல் இயங்கவிருக்கும் புதிய கல்வித் திட்டம் சம்பந்தமாக ஆராயுமுகமாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் மேற்படி திட்டம் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு பி சிவஞானசுந்தரம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் யாழ் மாவட்டக் கல்வி அதிகாரிதிரு எம். சிமியாம்பிள்ளை கலந்து புதிய கல்வித் திட்டம்பற்றி விளக்கமளித்தார்.

புதிய திட்டத்தின்படி காங்கேசன்துறை கல்வி வட்டாரம் தெல்லிப்பழை, காங்கேசன் துறை, இளவாலை, அம்பனை, அளவெட்டி - மல்லாகம் என்றும் 5 வலயங்களாகப் பிரிக்கப்படவிருக்கிறது.

ஒரு வலயத்திலுள்ள பாடசாலைகள் சில 1ம் வகுப்பில் இருந்து 8ம் வகுப்புவரையும், சில 9ம் வகுப்பில் இருந்து 13ம் வகுப்புவரையும் பிரிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கருத்தரங்கில் காங்கேசன்துறை வட்டாரத்தைச் சேர்ந்த அதிபர்கள், பெற்றோர்-ஆசிரியர் சங்கச் செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

## இந்திய அமைச்சரவை விரிவாக்கப்படும்

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் நாடு திரும்பியதும் இந்திய அமைச்சரவை விரிவாக்கப்படும்.

## திருச்சி சர்வதேச விமான நிலையமாகும்

[சென்னை]

திருச்சி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படும்.

மத்திய அரசு இதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

விமானப் போக்குவரத்து அதிகரிப்பதன் காரணமாக அது சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்பட இருக்கிறது

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/1698 இலக்க வழக்கில் வாதி திருநெல்வேலி கலாசாலை வீதி, நடராசா குமாரசாமிக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை ரூபா 12.893-33 சதமும் மேலும் இதில் 10.000/- ரூபாவுக்கு 18-8-82 தொடக்கம் 23-11-83 வரை வருடமொன்றிற்கு 48% (வீத) வட்டியும் அதன் பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றிற்கு 12% வீத வட்டியும் வழக்குச் செலவு 3094 ரூபாவும் விற்பனவுச் சலார்களும் இதில் வட்டியால் கொடுபட்ட 3400/- ரூபாவும், இன்னும் தீர்வையில் ரூபா 10.000/- கழித்து மிகுதித் தொகையைப் பிரதிவாதிகளாகிய கொக்குவில் கிழக்கு முருகன் கந்தையாவிடமும் பெண் குலத்தரசியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படுமாதனம் (1985 ஆம் யூலாய் மாதம் 9-ம் திகதி (9-7-85)) காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும், பகுதியும் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை ‘செருக்கற்புலம்’ நில. பர. 7. இது உத்தரவுபெற்ற நில அளவைக்காரன் க. ஐயாறு 6-2 78ல் அளந்துவரைந்த 2475ம் இலக்கப் படத்தின்படி நில பர. 6 குளி 12, 8 இது குறித்த படத்தில் துண்டுகள் 3, 4 5, 6 7 ஆக காட்டப்பட்டுள்ளது. இந்த நில. பர. 6குளி 12 8ல் தென்மேற்குப் பக்கமாக நில பர 2 குளி 11 4 போக மிகுதியில் தென்மேற்குப் பக்கமாக நில ப 2 இது குறித்த படத்தில் துண்டு 6 இந்த நில பர. 2 செய்பயிர் வான் பயிர்களும். எல்லை கிழக்கு: விற்பனவுகாரரின் மிகுதி ஆதனம். வடக்கு: பண்டாரி பொன்னுவினுதனம். மேற்கு ஐயன் கந்தையாவினுதனம். தெற்கு: 2ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படுமாதனம் இதடங்கலும் டி 444/106ல் பதியப்பட்டுள்ள ஆதனத்தில் உள்ள கிணறு கிணறுத் தூர்வை நிலத்தில் இதற்குரிய பங்கும் குறித்த ஆதனத்தைப் பொதுப்பாதையாக றோட்டுக்குப் போக்குவரவு செய்வதற்கும் பாவிக்கும் உரிமையும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 3845

## ரஜீவ் தரையிலிருந்து விண்வெளிப் ‘பயணம்’

ஹூஸ்டன், ஜூன் 16

முன்னாள் விமானக் காப்டனான இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு ஒரு முழுநீள விண்வெளிப்பயண அனுபவமும் தரையிலேயே கிடைத்தது!

பிரதமர் ரஜீவ்காந்தி நேற்று அமெரிக்காவின் விண்வெளி ஆராய்சசி நகரமான ஹூஸ்ட்டனுக்குச் சென்றார். அங்கே அவர் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சித் துறை அமைப்பான ‘நாஸா’ வின் லின்டன் ஜோன்சன் விண்வெளி ஆராய்சசிக் கூடத்துக்குச் சென்றிருந்தார்.

இக்கூடம் ஒரு விண்வெளி மண்டலமாகவே காட்சியளித்தது.

— ஜெபேர்ட் கிறிப்பன், ஷிவர், கோல்ஸ் என்ற மூன்று விண்வெளி வீரர்கள் ரஜீவுடன் உரையாடினர்கள்.

‘‘வான் மண்டலத்திலிருந்து விண்வெளிக்குள் நுழைவதும், பின்னர் மீண்டும் விண்வெளியிலிருந்து வான் மண்டலத்துக்குள் நுழைவதுமே விண்வெளிப் பயணத்தில் கஷ்டமான கட்டம்’’ என்று அந்த மூவரும் தெரிவித்தனர்.

இக்கூடத்தில் விண்வெளிப்பயணத்தை முடித்த வீரர்களும் அப்பயணத்துக்குத் தயாராவோரும் ஏனைய கட்டுப்பாட்டு, ஆராய்ச்சித்துறை அதிகாரிகளுடன் கூட்டாகப் பணிபுரிகின்றனர்.

20 கட்டுப்பாட்டு மேசைகளிலிருந்தே விண்வெளிப் பயணம் வழிநடத்தப்படுகின்றது. இப்பயணத்தில் பெரும்பகுதி கட்டுப்பாட்டினை விண்வெளிக்கலமே தனக்குத் தான் மேற்கொள்கின்றது.

ஒரு போலியான விண்வெளிப்பயணமென்றும் ரஜீவுக்குச் செய்து காட்டப்பட்டது. அப்போது தரையமைப்புக்களின் படங்களைக் காட்டியபோது இந்தியா பெரிதாகப் படம் பிடித்துக்காட்டப்பட்டது.

விண்வெளிக்கு அமெரிக்கா கொண்டு சென்ற சிறிய இந்தியக்கொடி யொன்றும் ரஜீவுக்கு வழங்கப்பட்டது.

இதனையடுத்து ரஜீவ் காந்தி விண்வெளிவிமானத்தினுள்ளும் (Spaceshuttle) ஏறி அமர்ந்து பார்வையிட்டார். அதன் பின்னர் அவ்விமானத்தின் பயணம் பற்றிய விறுவிறுப்பான நிகழ்ச்சி யொன்றும் அவருக்குக் காண்பிக்கப்பட்டது.

இறுதியாக திரு. ரஜீவுக்கும், அவரது மனைவி சோனியாவுக்கும் விண்வெளிப்பயணப் புகைப்படத் தொகுதிப்புத்தங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. [கி]


பண முதலீட்டாளர்களுக்கு
மாபெரும் சலுகை!!
55249/00 ரூபாய் முதலீடு
36 மாதங்களில்
100000-00 ரூபாயாக
மாற்றமடைகிறது.
இது உங்கள் பணத்திற்கு
முதலும் வட்டியுமாக கிடைக்கிறது.
எமது வட்டி விகிதம் 27% வீதம்.
500-00 ரூபாயை முதலிடலாம்.
காலமுதிர்வில் கைநிறையக் காசு
பாதுகாப்பாக, பணமாக கிடைக்கிறது.

வைப்புச் சான்றிதழ்கள் மத்தியவங்கி அங்கீகாரமிக்கது.

யூனியன் ரஸ்ட் அன்
இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24267 தலைமையகம்: கொழும்பு. கிளை: கண்டி.

## லதா மினி
(கோண்டாவில்)
10-30, 2-00, 4-00
ALICE GOOD BODY
வயது வந்தவர்களுக்கு மட்டும்

## ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

## ஸ்ரான்லி மினி
(சினிமா)
5'X5" திரையில்
10-30, 2-15, 4-15
**DIVINE EMMANUEL**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## சிவன் மினி சினிமா
K. K. S. றோட், சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
17-6-85 முதல்
10-30, 12-30, 2-30, 4-30
BLACK DEEP THROHT
கண்டிப்பாக 18 வயதுக்கு உட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்.

## லிடோ சினிமா
பாண்டியன் — ரேவதி நடித்த
**'புதுமைப் பெண்'**
(ஈஸ்மட்ன் கலர்)

## வெலிங்டன்
(யாழ். நகர்)
16-30, 2-30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)

## நியூசாந்தி (மினி)
யாழ். சாந்தி சினிமாவில்
10-30, 2-30
சரத்பாபு, சில்க்கு நரேஷ்குமார், சுதர்சன்
**"பழிவாங்கும் புலி"**
(புதிய பிரதி)
சண்டைக்காட்சிகள் நிறைந்த படம்

## S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, 2-30
ஜெய்சங்கர் சுஜாதா சந்திரசேகர்
**சிவப்பு நிலா**
4-30 p.m.
**"THUNDER"**
[War Film]
அதிபயங்கர சண்டைகள் நிறைந்த படம்

## ஆனந்தி வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
பிரகாஷ், சக்கரவர்த்தி, ராஜா...ன்னு நடித்த
**டீஸ்ரகோ டான்சர்**
இப்படத்திலிருந்து தழுவி எடுக்கப்பட்ட படம்தான்
பாடும் வானம்பாடி
(இந்தி—கலர்)

## மொடேர்ண் மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
**நனா Nana**
இளம் உள்ளங்களை ஏங்க வைக்கும் காதல் காவியம்
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

## வின்ஸர்
தினசரி 10-30, 2-00, 4-15
007 Roger Moore
in
THE FICTION MAKERS
ஜேம்ஸ் பொண்ட் நவீன ஆயுதங்களுடன் மிகப் பயங்கரப் பயணத்தைச் சித்தரிக்கும் ஓவியம்.

## குமரன் மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 12-30, 2-30, 4-15
EMMANUEL KISS ME
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## இன்று முதல் குதூகல ஆரம்பம்
## தேவிமினி சினிமா
(வின்ஸர் தியேட்டர் அருகாமை)
தினசரி—10 30-2.15
4 00 p. m.
Client Eastwood
IN
**The Bridge At Remagen**
[Eastman color]
பயங்கர திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்

## பவித்ரா மினி
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக் கல்லூரியடி)
10-30, 2-30 4-30
**SUMMER IN HEAT**
(Adults)
3840

## கொழும்பு — பேர்லின்
### Aeroflot மூலம்
நேரடி பிரயாணத்துக்கு ஒழுங்கு செய்து தரப்படும்.
ஏனைய நாடுகளுக்கு செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
கட்டணம்: 14900 ரூபா
அத்துடன் ஏனைய நாடுகளுக்கு செல்வதற்கு டிக்கட் மற்றும் பாஸ்போர்ட், பொன்ட் ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

ஏ. பிறேம்குமார்,
இல. 1, பரீத் பிளேஸ், கொழும்பு 4.
(சென் பீற்றர்ஸ் கல்லூரிக்கு அருகாமையில்)

யாழ்ப்பாணத்தில்
எஸ். தவராசா,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டு-கிழக்கு, வட்டுக்கோட்டை.
3864

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பொன்னம்பலம் பத்மநாதன்
(பொலிஸ் சார்ஜன்ட், காங்கேசன்துறை)

தோற்றம்: 4-09-1948 மறைவு: 27-06-84
திதி: 17-06-85

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து காலமெல்லாம் எங்களைக் கண்ணின் இமைபோல் காத்தருளிய எங்கள் அன்புத் தந்தையே! எங்களை எல்லாம் அருத் துயரத்தில் ஆழ்த்தி இறைவன் திருவடி சேர்ந்து ஆண்டு ஒன்று பூர்த்தியாகிவிட்ட போதிலும் உங்கள் அன்பும், பண்பும், பாசமும் எங்கள் இதயத்தைவிட்டு என்றும் அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், தாய் தந்தை, சகோதரர்,
மாமன், மாமி, மைத்துனிகள், மைத்துனர்.

இறங்கணிய வளவு,
காங்கேசன்துறை.
3789

## சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுள்ளது)
சுன்னாகம்
### ஏல விற்பனை
பாவிக்கப்பட்ட பின்வரும் லொறி உதிரிப்பாகங்கள் 25-06 85 முற்பகல் 10-00 மணிக்கு ஏலத்தில் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வைத்து விற்கப்படும் என அறியத் தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| 01. | கிறுங் சாவ்ட் [இசுசு லொறி] | 01 |
| 02. | பின் பிறேக் றம் [மொறிஸ் லொறி] | 01 |
| 03. | பின் டிவரன்சர் [மொறிஸ் லொறி] | 01 |
| 04. | றேடியேற்றர் கோர் | 03 |
| 05. | ரயர்கள் | 31 |
| 06. | யாக் 10 தொன் | 01 |
| 07. | றிம் | 03 |

பொதுமுகாமையாளர்
சுன்னாகம்
பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
14-06-85
3836

## கேள்விப்பத்திரம்
பொன்னாலை வரதராசப் பெருமாள் தேவஸ்தான
### தேர்முட்டி வேலை
தேர்முட்டி கூரை வேலை, ஊசிக்கால் வேலை. இவ்வேலைக்குரிய கூலியை 25-6-85 க்குமுன் ஒப்பந்தமாக எடுத்துச் செய்வோர் உரிய கூலியை தலைவர், தேர்த் திருப்பணிச் சபை, பொன்னாலை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
காரியதரிசி
தேர்த்திருப்பணிச்சபை
3807

## நெஞ்சில் நிறைந்த துள்ளிசைக் கவிஞன்



துள்ளிசைக் கவிமன்னன் 'வண்ணைத் தியாகன்' மு. தியாகராசா மறைந்தும் இன்றுடன் ஆண்டுகள் 2 உருண்டோடிவிட்டன. எனினும் அவருடைய பசுமையான நினைவுகள் நெஞ்சை விட்டகலாதவை. துள்ளிசைப் பாடல்கள் இயற்றுவதில் பிதாமகராகத் திகழ்ந்த அவருடைய பல பாடல்கள் சிதைந்தும் தொலைக்கப்பட்டும் போய் விட்ட இந்நேரத்தில் எஞ்சிய ஒரு சில பாடல்களையாவது தேடிப்பிடித்து நூலுருவில் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்தி நெஞ்சத்திற்கு இதமாக இருக்கிறது.

இந்தப் பணியைக் கவிஞருடைய மூன்றுவது திதிக்குள்ளாக நிறைவேற்றுவது கவிஞரது குடும்பத்தாருடையதும், கவிஞர்களதும், கலைஞர்களதும் தவிர்க்கமுடியாத கடமையாகும்.

—தேவிபரமலிங்கம்

## பல. நோ. கூ. சங்கம் அச்சுவேலி
### ஏல விற்பனை
எதிர்வரும் 27-06-85ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் பின்வரும் பொருட்கள் தலைவர் திரு தி. கமலநாதன் அவர்கள் தலைமையில், பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படவிருக்கின்றன.
ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருட்களுக்கு உடன் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| சுவிப்பிங் சீனி | – | ஸ்குறூ ஆணி வகைகள் |
| அரிசி | – | 'உ' கொழுக்கிகள் |
| பால்மா வகைகள் | – | பிணைச்சல்கள் |
| | – | கதவு கைப்பிடிகள் |

சாறிவகைகள் – கட்பீஸ்கள் – வெ. பப்ளின் வேட்டி சேட், கவுண்கள், சித்தை வகைகள் பிளவுஸ் ஆகியன.
ஏல விற்பனை நடைபெறும் இடம்:
ஆவரங்கால் தெற்கு இல. 10
(புத்தூர் யூனியனுக்கு அருகாமையில்)
மு. ஆனந்தகிருஷ்ணன்.
15-06-85 பொதுமுகாமையாளர்
(3865)

## 45ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
13–05–1922

மறைவு:
04–05–1985



### அமரர் தா. முருகேசு அவர்கள்
(இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்)

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
அறிவின் சுடராய் வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசிய தந்தையே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், குடும்ப உறவினர்கள்.
'இரத்தின வாசா'',
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.
3842

## மரண அறிவித்தல்

### சுப்பையா சிவபக்தன்

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சுப்பையா சிவபக்தன் அவர்கள் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சுப்பையா, திருமதி சின்னத்தங்கம் சுப்பையா (இளைப்பாறிய தலைமை ஆசிரியை அருணாசல வித்தியாசாலை) ஆகியோரின் அன்புமகனும், Dr. சிவதாசன் (U. K.), Dr. சிவரூபவதி U. K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr. சிவதேவி (U.K.), திரு. சிவசுப்பிரமணியம் (பொறியியலாளர் U. K.) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (16-6-85)ல் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

திருமதி, சின்னத்தங்கம் சுப்பையா

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

3859

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கம் சிவசம்பு

மண்டைதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவசம்பு சின்னத்தங்கம் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற அருணாசலம் சிவசம்பு [முன்னாள் கிராமசபை உறுப்பினர்] அவர்களது மனைவியும், காலம் சென்ற பொன்னையா ஆறுமுகம்-மண்டைதீவு தெற்கு, பொன்னையா செல்லத்துரை - வவனிக்குளம் அவர்களினது சகோதரியும், குமாரலிங்கம் (உத்தரவுபெற்ற வியாபாரி, மண்டைதீவு), திருமதி அமிர்தாம்பாள் ஞானசுந்தரம் ஆகியோரது அன்புத் தாயாரும், ஞானசுந்தரம் (மனேச்சர், சாந்தி சினிமா, மட்டக்களப்பு),மஞ்சுளாதேவி ஆகியோரது அன்பு மாமியாரும், சந்திரகுமார் (ஜெர்மனி), காலம்சென்ற ஜெகத்குமார், திருமதி உதயராணி விஜயகுமார், திருமதி உதயமதி யோகேஸ்வரன், தவசீலன் (ஜெர்மனி), உதயரஞ்சினி, ஜெயசீலன் ஆகியோரது அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 17-6-85 பி ப. 4 மணிக்கு மண்டைதீவு, எருக்கலம்துண்டி மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

[3869]

## மரண அறிவித்தல்

### திரு. ஐயம்பிள்ளை பூபாலசிங்கம்

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஐயம்பிள்ளை பூபாலசிங்கம் 14-6-1985 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், திருமதி ஜெகதீஸ்வரி ஞானசேகரர், திரு. பரமேஸ்வரன் (கச்சேரி, கிளிநொச்சி), திரு. ஞானசுந்தரம் (இலங்கை வங்கி, கொழும்பு), திருமதி லோகேஸ்வரி விவேகானந்தராசா (மலேசியா), திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன் (அமெரிக்கா), திரு. மகேஸ்வரன் (பால் சபை, செங்கலடி), திருமதி மகேஸ்வரி நித்தியானந்தன், திரு ஜெகதீஸ்வரன் (யாழ் பல்கலைக்கழகம்), திருமதி திலகேஸ்வரி சார்ள்ஸ் பெரினண்டோ, திரு லோகேஸ்வரன் (குவைத்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு. ஞானசேகரர், திருமதி துவாரகாதேவி பரமேஸ்வரன், திருமதி கௌரிதேவி ஞானசுந்தரம், Dr. விவேகானந்தராசா (மலேசியா), திரு சு சச்சிதானந்தன்(அமெரிக்கா), திருமதி சந்திரவதனா மகேஸ்வரன், திரு. நித்தியானந்தன், திருமதி அம்பாள் ஜெகதீஸ்வரன் (கச்சேரி, யாழ்ப்பாணம்), திரு. சார்ள்ஸ் பெர்னண்டோ, திருமதி கிருபாலக்ஷ்மி கோலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜேநதிரன். திருமதி வனஜா செல்வராஜா (U K), (காலஞ்சென்ற) மோகன், சத்தியன், மகிழன், சுகுமார், யாழினி, விசாகன், ஹரிந்திரன் (மலேசியா), சுதேஷ் (மலேசியா). தயாளன் (மலேசியா), ரஞ்சித் (மலேசியா), துஷித்தா (அமெரிக்கா), லாஜு (அமெரிக்கா), காயதத்திரி. நிகாரா, ஜமுனா. நிற்மலானந்தா, ஜனனி, ஜதீஷனி, ஜெசில்டா, கஜானி, கிருஷாஸ்ந் ஆகியோரின் அன்புப் பேரனாரும், யசோதாவின் அன்புப் பூட்டனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-6-85 திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 3 மணிக்கு தகனக் கிரியைகளுக்காகத் தெல்லிப்பழை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பூ பரமேஸ்வரன்,

'துவாரகா பவனம்', அரசினர் ஆஸ்பத்திரி
முன்பாக, தெல்லிப்பழை.

3870

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 88-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu Po Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.

## இராணுவம் சோதனை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு ஆயுதப்படையினர் சோதனை நடத்தியபோது ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

ஆறுகால்மடத்தடியில் கார் ஒன்று காணப்பட்டதாகவும், இதுபற்றியும் விசாரணை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [க]

## இருவர் விடுதலையாவர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கைதாகியுள்ள சில இளைஞர்கள் தொடர்பாகப் பயங்கரவாதத் தடுப்புச்சட்ட ஆலோசனைக்குழு அண்மையில் கூடி சிபார்சுகளை வழங்கியுள்ளது.

கணபதிப்பிள்ளை தேவராஜா ஓமந்தை), கந்தையா சுந்தரலிங்கம் (திருமலை), நற்குணம் தேவதாசன் (மட்டு நகர்), ராஜன் பெர்னண்டோ (மன்னார்), சபாரத்தினம் நந்தகுமார் (திருமலை), சின்னசாமி மதன மோகன் (திருமலை) ஆகியவர்கள் பற்றியே இக்குழு ஆலோசனை நடத்தி சில முடிவுகளை சிபார்சு செய்துள்ளனர்.

முதல் இருவரையும் விடுதலை செய்யவேண்டும் என்றும் 4, 5, 6ம் நபர்கள் விசாரணைகளை மீண்டும் 28ம் திகதி நடத்துவதென்றும் குழு முடிவு செய்துள்ளது.

இளைஞர்கள் சார்பில் திரு. குமார் பொன்னம்பலம் ஆஜராகியிருந்தார்.

## உலக மேடை

(3- பக்கத் தொடர்ச்சி)

பாகக்காண, ஐரோப்பிய பெண்களின் பார்வைக்கொப்ப திருத்தி அமைக்கப்படுகிறது.

### சீனு

பிரிட்டிஷ் குழுவினர் ஏற்படுத்திய கலவரத்தைப்போல் சீன உதைபந்தாட்டக் கோஷ்டியினர் ஹொங்கொங் கோஷ்டியுடன் தோல்வி கண்டதும், பலவிதமான கலவரத்தில் ஈடுபட்டதை சீனமக்களும் அரசும் கண்டித்திருக்கின்றன. தங்கள் மக்களை இம்சைப்படுத்தாது, வேற்றுநாட்டு பார்வையாளர்களை பலவித வன்செயல்களால் இழிவுபடுத்திவிட்டது சீன வரலாறு காணாத கொடுமையெனக் கண்டிக்கப்படுகிறது

'முதல்நட்பு பின்புபோட்டி' என்ற சுலோகம் இக்காலத்தில் சீனவில் காணப்படவில்லை; தோல்வியால் 1986ல் நடக்கும் உலக உதைபந்தாட்டக் கோப்பை போட்டியில் இடம் பெறவில்லை

1960ல் ஆசிய விளையாட்டு மைதானம் சீனுவில் என்பதும், 2000ல் ஒலிம்பிக் போட்டி சீனுவில் நடக்கும் சாத்தியம் இக்கட்டத்தில் மறுபரிசீலனைக்குரியவை.

'முதல் நட்பு பின்புபோட்டி' என்ற பண்டைய சீனக் கோட்பாடு இக்காலத்தில் சீனுவில் காணப்படவில்லை; தோல்வியால் 1986ல் நடக்கும் உலக உதைபந்தாட்ட கிண்ணப் போட்டியில் சீனு இடம்பெறவில்லை. 1990ல் ஆசிய விளையாட்டு மைதானம் சீனுவில் என்பதும், 2000த்தில் ஒலிம்பிக் போட்டி சீனுவில் நடக்கும் சாத்தியம் உண்டென்பதும் குறிப்பிடத்தக்கது

இன்று சீனமக்கள் நாட்டியத்தில் பெரும் ஆர்வம்காட்டுகின்றனர் மா-சே-துங் காலத்தில் இது நினைக்கமுடியாத காரியம் இன்றும் லட்சியவாதிகள் பலர் இதனைக்கண்டிக்கின்றனர். இருப்பினும் பொழுது போக்கினுக்கு உரிய ஒரு கலை என்ற அளவில் பொதுவுடைமைப் பண்புக்கு இது பங்கம் அளிக்காது என்று இன்றைய சீன இளைஞர் கருதுகின்றனர்.

## டீசலுடன் வந்த லொறி தடுக்கப்பட்டது

(கொழும்பு)

வடபகுதிக்கு டீசல் ஏற்றி வந்த லொறி ஒன்றை நித்தம்புவ பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

பலகை ஏற்றிக் கொண்டு வந்த இந்த லொறியைச் சந்தேகத்தின் பேரில் மறித்துச் சோதனையிட்டபோது உள்ளே பத்து பரல்களில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான டீசல் இருக்கக்காணப்பட்டதாம்.

சம்பந்தப்பட்ட லொறிசாரதியை பொலிசார் தற்போது விசாரணை செய்து வருகின்றனர்.

பயங்கரவாதிகளுக்கும் இந்த டீசல் கடத்தலுக்கும் சம்பந்தம் உண்டா என்பதை அறிந்து கொள்ளுவதற்காக விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

லொறி கிளீனர் தப்பி ஓடிவிட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜூலை 17வரை பதிவுசெய்யலாம்

(கொழும்பு)

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் வர்த்தகத்துறையில் தமிழ் பட்டதாரி மாணவர்கள் அடுத்த கல்வி ஆண்டுக்காக பதிவுசெய்துகொள்வதற்கான காலக்கெடு ஜூலை 17ம் திகதிவரை பல்கலைக் கழக மானியக்குழுவினால் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவர்கள் தம்மைப்பதிவுசெய்வதற்கு குறிக்கப்பட்டிருந்த திகதியில் வடபகுதியில்நிலவும்பதற்றம் காரமாக சாத்தியமற்றுப்போய்விட்டதென்றும் இன்னொரு சந்தர்ப்பம் இவர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் விடுத்தகோரிக்கையை அடுத்து இந்தக் காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது. 40 மாணவர்கள் இதனால் பயன்பெறுவர்.

## கடத்தப்பட்ட டிராக்டர் திரும்பியது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட டிராக்டர் ஒன்று இனந்தெரியாவர்களால் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஆலையிலிருந்து அண்மைக்காலத்தில் நான்கு டிராக்டர்கள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டன இவற்றில் ஒரு டிராக்டர் நேற்று நண்பகல் தொழிற்சாலை வாயிலில் இனந்தெரியாதவர்களால் கொண்டுவந்துவிடப்பட்டது.

இந்த ஆலையில் இடம் பெற்ற கொள்ளைகள், வாகனக் கடத்தல்களை கண்டித்து தொழிலாளர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்த தீர்மானித்திருந்ததும் பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டதும் தெரிந்ததே.

## இதுநாசவேலையா–

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காய்வு உத்தியோகத்தரினால் கண்டுபிடிக்கப்பட்ட தவறான கொடுப்பனவுகளின் விளைவாக சில உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் ஓய்வூதியக் கிளையில் நீண்டகாலம் கடமையாற்றிய சிலருக்கு எதிராக விசாரணை நடைபெற்று வருவதாகவும் இச்சம்பவம் இவ் விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் செய்யப்பட்ட சதியாயிருக்குமோ என்று சந்தேகிக்க இடமளிப்பதாகவும் தெரிவிக்கும் யாழ் அரச அதிபர், பொதுமக்களின் அத்தியாவசிய தேவையானபொருள்களைத் தருவித்து வழங்கியும் கொடுப்பனவுகளை அளித்து வரும் அரசகரும செயலர் அனைவரும் எடுக்கும் முயற்சிகள் சாணேற முழம் சறுக்கும் கதையாக முடிவாகவும், இத்தீவைப்புச் சம்பவத்தினால் ஓய்வூதியம் பெறும் வயோதிபர்கள் தள்ளாத வயதில் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் அறிக்கையில் கவலை தெரிவித்துள்ளார்.

இந்நிலையை நீக்கப் பொது மக்கள் தமமுடன் சேர்ந்து ஆக்கபூர்வ உபவிகளைச்செய்வதற்கும தமக்கு அப்பாற்பட்ட இத்தீய செயல்களை முற்றாகக் களைவதற்கும் முன்வரவேண்டுமென்றும் அறிக்கைமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வவனியாவுக்கு அதிக அளவில் வரும் தமிழ் அகதிகள்

(வவனியா)

வவனியாவிற்கு அகதிகளாக வந்துள்ள அனுராதபுர நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களுடைய தொகை 320 பேர் ஆகும்.

பீதிகாரணமாக இவர்கள் அநுராதபுரத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

வவனியாசுத்தானந்த இந்து இளைஞர் மன்றக்கட்டிடத்தில் தங்கியுள்ள இவர்களுக்கு வவனியா சமூகசேவைஇலாகா உதவிகளை வழங்குகின்றது.

இதேவேளை மதவாச்சியிலிருந்து ஆறுகுடும்பங்களைச் சேர்ந்த 24தமிழர்கள் அகதிகளாகச் செட்டிகுளம் வந்துள்ளனர்.

மதவாச்சியில் இவர்கள் உயிருக்குஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து இவர்கள் கால் நடையாகச் செட்டிகுளம் வந்து சேர்ந்துள்ளனர்.

1955ம் ஆண்டு முதல் அங்கு குடியிருந்தஇவர்கள் இப்போது அகதிகளாக வந்துள்ளார்கள்.

செட்டிகுளம் உதவி அரச அதிபர்செல்வி எமில்டா அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு இருப்பிட வசதிகளைச் செய்து கொடுத்ததுடன் உணவுப் பொருள்களையும் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

## 100க்கு அதிகமானோர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கு அவரது உதவியாளர் விக்டர் என்பவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (து)

## ஓமந்தையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான ரசீதுகள் பிரயாணிகளுக்கு வழங்கப்பட்டதெனவும், பின்னர் பிரயாணிகளுக்கு அந்தப் பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டதாகவும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆறு நாட்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பந்தனும் சென்னையில் கூட்டாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்

திருகோணமலையில் நடைபெற்ற [வன்செயல்களுக்குத் தமிழர்கள்தான் காரணம் என்று இலங்கை அரசு தெரிவித்த குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவிக்குமுகமாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

மே மாதம் 31ம் திகதியிலிருந்து தொடர்ந்து 6 நாட்கள் தமிழர்கள்வாழும் 22 கிராமங்கள் தொடர்ச்சியான தாக்குதலுக்குள்ளாகின. இத்தாக்குதலினால் 1,500 வீடுகள்வரை தரைமட்டமாயின. நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டவர் என்று அறிக்கை தெரிவிக்கிறது. (து)

## மருந்துகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிகளின் மருந்துகள் நேற்று முன்தினம் பாதுகாப்புடன் மருந்துப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளது.